அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 26/2017(VI)

எனது இலக்கம் : Pns/P4/W&OP/F11
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம
கொழும்பு 07.

2021.08.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள

## விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பழைய இலக்கம்: 82/83 மற்றும் M/F வகுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள பழைய உறுப்பினர்களை, நிகழ்நிலை முறையின் ஊடாக மீளப் பதிவுசெய்தல்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2017.10.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017, 2018.03.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017(I), 2018.05.03 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017(II), 2018.08.02 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017(III), 2018.11.15 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017(IV) மற்றும் 2021.02.10 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2017(V) இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அச்சுற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 82/83 மற்றும் M/F வகுதியின் கீழுள்ள விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு நிகழ்நிலை முறையில் மீள பதிவுசெய்ய வழங்கப்பட்டிருந்த இறுதித் திகதியை 2021.12.31 ஆந் திகதி வரை மீண்டும் நீடிக்கப்படுகின்றது.

03. இவ்விடயம் தொடர்பில், 2021.12.31 ஆந் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளும், பழைய விதவைகள் அநாதைகள் இலக்கங்களும் நிராகரிக்கப்படும் என்பதோடு உமக்குக் கீழ் பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் முறைசார்ந்த வகையில் அறிவித்து, குறித்த திகதிக்கு முன்னர் உரியவாறு பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு